பக்கங்கள்: 09

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 09 புதன்கிழமை 25.08.2021 கதிர் 157

## அரசின் உத்தரவை மீறிய மேலும் 705 பேர் சிக்கினர்

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 705 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் ☞ 2

## அஜித் றோஹணவுக்கு கொரோனா; அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி



முன்னாள் பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹணவுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. *(இன்னுமொரு செய்தி பக். 09இல்)*

## விமானப்படைத் தளபதியும் அவசர சிகிச்சைப் பிரிவில்

### *பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதி*



கொழும்பு, ஓக. 26

இலங்கை விமானப் படையின் தளபதி எயார் மாஷர்ல் சுதர்ஷன பத்திரன திடீரென சுகயீனமுற்ற நிலையில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனையின் ☞ 2

# ஊரடங்கு நீடிக்கப்படுமா? 27ஆம் திகதி இறுதி முடிவு

### *சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*

**நாட்டில் முழுநேரமும் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பில் நாளைமறுதினம் (27) அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

**இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** ☞ 2



## குடாநாட்டில் இன்று ஒரே நாளில் 239 பேருக்கு கொரோனா உறுதி

### *மாவட்ட அரச அதிபர் மகேசன் தகவல்*



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று ஒரே நாளில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறுகளின்படி 239 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். ☞ 2

## சித்தங்கேணியில் குடும்பஸ்தர் கம்பியால் தாக்கிப் படுகொலை

### *அயல் வீட்டுக்காரர்கள் வெறியாட்டம்*



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தங்கேணி கலைவாணி வீதிப் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் அயல் வீட்டுக்காரர்களால் கம்பியால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ☞ 2

## யாழில் வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞருக்குக் கொரோனாவா?

### *வைத்தியசாலையில் பெரும் களேபரம்; மீள்பரிசோதனைக்கு நீதிவான் உத்தரவு*

*யாழ்., குருநகரில் வன்முறைக் கும்பலால் வாளால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட இளைஞருக்குக் கொரோனாத் தொற்று உள்ளது என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் உயிரிழந்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் குழப்பமடைந்தமையுடன் இளைஞரின் உடலைத் தம்மிடம் தரும்படி நேற்று வைத்தியசாலையில் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர்.*

*இந்நிலையில், சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன் இது தொடர்பில் யாழ். நீதிவான் பீற்றர் போலின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.*

*இதையடுத்து உயிரிழந்த குறித்த இளைஞருக்குத் திரும்பவும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறும், பரிசோதனையின் அறிக்கையை யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் நேற்றிரவு உத்தரவிட்டார்.*

*இதனடிப்படையில் மீண்டும் குறித்த இளைஞருக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று வைதியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.*

## 10நாள்களுக்குள் 1,815 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 10 நாள்களில் ஆயிரத்து 815 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓகஸ்ட் 14 முதல் 23 வரையான காலப்பகுதியிலேயே குறித்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி 14 ஆம் திகதி 161 பேரும், 15 ஆம் திகதி 167 ☞ 2

## கொரோனா காலப்பகுதியில் உயிர் அர்ப்பணிப்புடன் செயற்படுவோரை மன உளைச்சலுக்கு ஆளாக்காதீர்!

### கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்து சிறிதரன் எம்.பி. வேண்டுகோள்



கொரோனா காலப்பகுதியில் உயிர் அர்ப்பணிப்புடன் செயற்படும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரை மன உளைச்சலுக்கு ஆளாக்காதீர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தினார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரின் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## குடாநாட்டில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறுக்கையிலேயே மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 ஆயிரத்து 725 பேருக்கு இற்றைவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த காலத்தைவிட தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதோடு இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

யாழில் நேற்றைய கணக்கெடுப்பின்படி 213 பேர் இதுவரை இறப்புக்குள்ளாகியுள்ளார்கள். மேலும் 3 ஆயிரத்து 686 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 548 அங்கத்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பொதுமக்கள் இறுக்கமாக சுகாதார கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் கொரோனா செயலணியின் வழிகாட்டலுக்கு அமைய பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதுடன் மிக அவசிய தேவைகளுக்கு மட்டுமே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியே வரவேண்டும்.

அதேவேளை, சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல் வேண்டும், சமூக இடைவெளியைப் பேண வேண்டும். தேவையற்ற நடமாட்டம் மற்றும் ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

எனவே, இந்த நடைமுறைகளைப் பின்பற்றி உங்களையும், குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை, எழுந்து நடமாட முடியாத வயோதிபர்களுக்கு வீடு வீடாகச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை சுகாதாரத்தரப்பினர், கிராமசேவையாளர்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

தடுப்பூசிகளை விரைந்து பெற்றுக் கொள்வது எமது பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காகவே ஆகும். இவை இறப்புக்களை தவிர்க்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

ஆகவே, பொதுமக்கள் அரசின் அறிவுறுத்தலின்படி தங்களையும், சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் தடுப்பூசிகளைப் பெற்று தத்தமது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வது அவசியமாகும் - என்றார்.

## ஊரடங்கு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை 10 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இலங்கையில் சில நாள்கள் தொடர்ச்சியாக நாளாந்தம் 4 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையிலேயே ஊரடங்கை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்பது தொடர்பில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## விமானப்படை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், அதன் தாக்கத்துக்கு பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தர்களும் இலக்காகி வருகின்றனர்.

## கொரோனா...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலைமை தொடர்பாக ஆராய் வதற்குச் சிறிதரன் எம்.பி. விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவித்ததாவது:-

உலகை கடந்த ஒரு வருட காலத்துக்கும் மேலாக ஆட்டிப் படைத்து வருகின்ற கொரோனாத் தொற்று காரணமாக பல லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரை குணப்படுத்துவதிலும், கொரோனாத் தொற்று பரவாமல் கட்டுப்படுத்தும் நடவடிக்கையிலும் பலர் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறே கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள், மருத்துவ தாதிகள் உள்ளிட்ட சுகாதார சேவைப் பணியாளர்கள் பலர் பொதுமக்களுக்காகத் தங்கள் மீதான கொரோனாத் தொற்று அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக அர்ப்பணிப்பான சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தம் உயிரைப் பொருட்படுத்தாமல் இவ்வாறு கிளிநொச்சி மக்களுக்காகச் சேவையாற்றி வரும் வைத்தியர்கள், சுகாதாரப் பணியாளர்களின் சேவைகளைப் பாராட்டுவதை விடுத்து சமூக வலைத்தளங்களின் மூலம் அவதூறுகளைப் பரப்பி அவர்களை மன உளைச்சலுக்கு உட்படுத்தும் நோக்கத்துடன் பதிவுகளை இடுவது மன வருத்தத்தை அளிக்கின்றது.

இவ்வாறு தம் உயிரை அர்ப்பணித்து எமக்காகப் பணியாற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பதிவுகளை இடுங்கள். அப்போதுதான் அவர்கள் மன நிறைவுடன் தமது பணிகளை முன்னெடுப்பார்கள் - என்றார்.

## சித்தங்கேணியில்...........





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபருக்கும் அவரது அயல் வீட்டுக்காரருக்கும் கடந்த மூன்று மாதங்களாகக் காணிப் பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில், இன்று காலை அவருக்கும் அவரது அயல் வீட்டுக்காரர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. அது பின்னர் கைகலப்பாக மாறியது.

இதன்போது மரணமடைந்த நபரும் அவரது மகளும் அயல் வீட்டுக்காரர்களால் கம்பியால் கடுமையான தாக்குதலுக்குள்ளாகினர்.

தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது. அவரின் மகள் தலையில் பலத்தகாயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் இராசநாயகம் ரெஜியானந்தன் (வயது- 49) என்பவரே மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 10 நாள்களுக்குள்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேரும், 16 ஆம் திகதி 171 பேரும், 17 ஆம் திகதி 170 பேரும், 18 ஆம் திகதி 186 பேரும், 19 ஆம் திகதி 195 பேரும், 20 ஆம் திகதி 198 பேரும், 21 ஆம் திகதி 183 பேரும் ,22 ஆம் திகதி 194 பேரும், 23 ஆம் திகதி 190 பேரும் உயிரிழந்துள்ளனர்.

## அரசின்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 58 ஆயிரத்து 414 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண்
உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அழிவுக்கான ஆரம்ப வேலை

ஒரு குற்றம் இழைக்கப்படும் போது – அல்லது ஒரு மோதல் அல்லது யுத்தம் வெடிக்கும் போது – முதலில் சாகடிக்கப்படுவது உண்மைதான். மெய்மையைச் சாகடித்து பொய்மை ஊர்வலம் வரும்.

உண்மையை உலகுக்கு எடுத்துரைப்பதில் முக்கிய பங்காற்றுபவை ஊடகங்கள். குற்றத்தை – அழிவை – நாசத்தை – சமூக விரோதச் செயற்பாடுகளை – இழைக்க முயலும் தரப்புகள் உண்மைகளை மூடி மறைப்பதற்காக முதலில் பாய்ச்சல் நடத்துவது ஊடகங்கள் மீதுதான். இப்பத்தியில்மீண்டும்மீண்டும்நாம்சுட்டிக்காட்டிவருகின்றமை போல ஊடகங்களை அடக்கியாளும் முன்னைய இருண்ட யுக ஆட்சிக்காலம் திரும்பவும் சூழ்ந்து வருகின்றது என்ற அச்சம் ஊடகத் தரப்பாருக்கு ஏற்பட்டுள்ளது.

2015 ஜனவரி ஆட்சி மாற்றத்தை அடுத்து, அதுவரை சூழ்ந்திருந்த இருண்ட யுக ஆட்சி மெல்ல நீங்கி, ஜனநாயக ஒளிக்கீற்றுக்கள் சமூகத்தின் மீது படரும் ஆரோக்கிய சூழ்நிலை ஏற்பட்டதை கண்டோம். ஊடகத்துறை அதை வெளிப்படையாக உணர்ந்து மெச்சியது.

ஆனால் நிலைமை மீண்டும் வேதாளம் மரத்தில் ஏறிய கதையாக மாறி வருவது கண்கூடு.

ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு பொலிஸ்மா அதிபரைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்ற விவகாரம் மீண்டும் இருண்ட யுக ஆட்சிக்கான அதிகார அட்டகாசம் என்ற பேரிருள் நம்மைச் சூழ்ந்து வருவதைத்தான் எச்சரிக்கையுடன் முரசறைகின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர்களை கைது செய்தல் மற்றும் விசாரணைக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த விடயத்தில் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டிய ஓர் அம்சம் ஊடக சுதந்திரம் தொடர்பான விவகாரத்தில் மிக முக்கியமானதாகும்.

ஆட்சித் தரப்பின் உத்தரவுகள், வழிகாட்டல்களின் அடிப்படையில் ஊடகவியலாளர்களைப் பொலிஸார் கைது செய்கின்றனர். இந்த ஆட்சித் தரப்பினரின் சுத்துமாத்துக்கள், திருகுதாளங்கள், சில்லெடுப்புகள் போன்றவை தொடர்பில்ஊடகவியலாளர்கள்பலஉண்மைகளைத்துணிச்சலுடன் அம்பலப்படுத்தி வந்துள்ளனர். அவற்றுக்காக அவர்களைக் கைது செய்து, விசாரணை நடத்தி, செய்தி மூலங்களைக் கண்டறிய முடியாத ஆட்சித் தரப்பினர், சந்தர்ப்பம் பார்த்து இருந்து வேறு விடயங்களின் பெயர்களில் அந்த ஊடகவியலாளர்களைக் கைது செய்து, தடுப்புக் காவலில் வைக்கின்றனர். வேறு விடயங்களை விசாரிக்கும் பெயரில் ஊடகவியலாளர்களைக் கைது செய்துவிட்டு, அவர்களைக் காவலில் வைத்து, தங்கள் தொடர்பான பிற விடயங்களை விசாரித்து செய்தி மூலங்களை இலக்கு வைக்கின்றனர் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

உதாரணத்திற்கு 'லங்கா ஈ நியூஸ்' செய்தி நிறுவனத்தில் மேலாளராகப் பணிபுரியும் கீர்த்தி ரத்னாயக்க 90 நாள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு தொடர்பில் சில செய்திகளை வெளிப்படுத்தினார் என்பதுதான் இப்போது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. ஆனால் பொலிஸாரின் காவலில் இருக்கும் சில போதைவஸ்து கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களை வெளியே அழைத்துச் சென்று, சுட்டுக் கொல்லும் 'என்கவுண்டர்' திட்டம் வகுக்கப்பட்டுள்ளது, அவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்ற செய்தியை அவர் முன்கூட்டியே வெளிப்படுத்தி இருந்தார். அதன்படியே பின்னர் நடந்தேறியது. இப்போது வேறு விடயங்களின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அவரைக் காவலில் வைத்து அச்சுறுத்தி, பழைய செய்திக்கான செய்தி மூலம் குறித்து விசாரிக்கப்படுகின்றது என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மீது தவறான முறையில் கைவைப்பது சுய அழிவுக்கான ஆரம்ப வேலை. 'கெடுகுடி சொல் கேளாது'. நாம் என்ன செய்ய முடியும்?

# அடிப்படைப் பிரச்சினைகளை மறைக்கவே பெரமுனவால் புதிய நாடக அரங்கேற்றம்

## அசோக அபேசிங்க காட்டம்

நாட்டில் எழுந்துள்ள அடிப்படைப் பிரச்சினைகளை மூடி மறைக்கவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பங்காளிக் கட்சித் தலைவர்களை விமர்சித்து புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் வைரஸ் தாக்கத்தால் பதிவான மரணங்கள் அனைத்துக்கும் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக செயற்பட்டமையால் நாடு பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

இடுகம கொவிட் நிவாரண நிதியத்தின் மீது நம்பிக்கையில்லை. கொவிட் முதலாம் அலையில் இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு தரப்பினர் நிதியத்துக்குஉதவிபுரிந்தார்கள். இறுதியில் அந்நிதியத்துக்கு கிடைக்கப் பெற்ற நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தவில்லை. ராஜபக்ஷர்கள் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தாலேயே சுதந்திரக் கட்சியினர் இடுகம நிதியத்துக்கு தங்களின் மாதச் சம்பளத்தை வழங்காமல், சுதந்திரக்கட்சிமட்டத்தில்நிதியத்தை உருவாக்கியுள்ளார்கள்.

ஆகவே ஐக்கிய மக்கள் சக்தி 'எதிர்க்கட்சியின் மூச்சு' என்ற நிதியத்தின் ஊடாக நிதி திரட்டி வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

சுகாதாரம், பொருளாதாரம் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. இந்த விடயங்களை மூடி மறைப்பதற்காக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் பங்காளி கட்சி தலைவர்களை விமர்சித்து புதிய நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். – என்றார்.



# 'சக்தி' கப்பல்களை நேரில் சென்று பார்வையிட்ட கடற்படைத் தளபதி

இந்தியாவிலிருந்து சிகிச்சைக்கான ஒட்சிசனைக் கொண்டுவந்துள்ள இந்திய கடற்படை மற்றும் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 'சக்தி' கப்பல்களை கடற்படைத் தளபதிவைஸ்அட்மிரல்நிஷாந்தஉலுகேதென்ன பார்வையிட்டார்.

இரண்டு கப்பல்களின் கப்டன்கள் மற்றும் கடற்படையினருக்கும் நன்றிகளை அவர் தெரிவித்துக்கொண்டார்.

அதேவேளை, அவசர தேவைக்கான சிகிச்சைக்கான ஒட்சிசனை இலங்கைக்கு விரைவாகக் கொண்டுவருவதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக இந்தியக் கடற்படையினருக்கும், மிகக் குறுகிய கால அறிவிப்புக்கு இணங்க கப்பலைத் தயார் செய்து விரைவாகவே இந்தியாவிலிருந்து ஒட்சிசனைக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்த இலங்கை கடற்படையின் சக்தி கப்பல் குழுவினருக்கும், கடற்படைத் தளபதி தமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சைக்கான ஒட்சிசனை இலங்கைக்கு விரைவாகக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கடற்படைத் தளபதி இந்தியக் கடற்படைத் தளபதியான அட்மிரல் கம்பீர் சிங்கிடம் விடுத்த வேண்டுகோளின் பிரதிபலனாக, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான சக்தி கப்பல் இந்தியாவின் விசாகப்பட்டின துறைமுகத்திலிருந்து 100 தொன் ஒட்சிசனுடன் கடந்த 22ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த நிலையில், இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான சக்தி கப்பலைப் பார்வையிட்ட கடற்படைத் தளபதி இந்திய கடற்படையினர் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

# அரச வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சரவையில்!

அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்று பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் அமைச்சரவையின் கவனத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள், அரச வணிக நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிடம் காணப்படும் வாகனங்கள் 82 ஆயிரத்து 194 ஆகும். அவற்றில் 76ஆயிரத்து661வாகனங்கள்உபயோகிக்கப்படுகின்றமையுடன் 5 ஆயிரத்து 533 வாகனங்கள் இயங்கு நிலையற்றனவாகக் காணப்படுகின்றன. இயங்கு நிலையிலுள்ளவற்றில் 33 ஆயிரத்து 931 வாகனங்கள் அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களிடமும், அரச வணிக நிறுவனங்களிடம் 26 ஆயிரத்து 395 வாகனங்களும், மாகாண சபைகள்மற்றும்உள்ளூராட்சிமன்றங்களிடம் 16 ஆயிரத்து 335 வாகனங்களும் காணப்படுகின்றன. அவ்வாறே, அரச நிறுவனங்களிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 8 ஆயிரத்து 500 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு அவர்களின் பிரத்தியேக மோட்டார் வாகனங்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொள்வதற்காகஅனுமதிவழங்கப்பட்டுள்ளது.

பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தகவல்களைக் கருத்தில் கொண்டு தற்போது இயங்கு நிலையில் அல்லாத வாகனங்களில் திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களைத் துரிதமாக திருத்தம் செய்து பாவனைக்குட்படுத்தவும், திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை முறையான பெறுகைக் கோரலை பின்பற்றி தாமதிக்காமல் அகற்றுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# தலிபான் தலைவருடன் அமெரிக்க உளவுத்துறை தலைவர் ரகசிய சந்திப்பு

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியமையையடுத்து அந்நாட்டை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். மேலும், ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளை தலீபான்கள் தீவிரப்படுத்தியுள்ளன.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானின் சிக்கியுள்ள தங்கள் நாட்டை சேர்ந்தவர்களை மீட்கும் நடவடிக்கையில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த மீட்பு நடவடிக்கைகளுக்காக காபூல் விமான நிலையத்தை அமெரிக்கப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

ஒப்பந்தத்தின்படி, ஆப்கானிஸ்தானில் இருந்து ஆகஸ்ட் 31ஆம் திகதிக்குள் அமெரிக்கப் படைகள் வெளியேறிவிட வேண்டும் இல்லையேல் விளைவுகளை சந்திக்க நேரிடும் என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள அமெரிக்கர்களை மீட்பு பணிகள் கூடுதல் கால அவகாசம் தேவைப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.



இந்நிலையில், தலிபான் தலைவர்களில் முக்கிய நபரான முல்லா அப்துல் கானியை அமெரிக்க உளவுத்துறை யின் (சி.ஐ.ஏ.) தலைவர் வில்லியம் பர்ன்ஸ் நேரில் சந்தித்து பேசியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த திங்கட்கிழமை ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இந்த ரகசிய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா மற்றும் பிறநாட்டு மக்களை வெளியேற்றுவதில் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு பின்னரும் கால அவகாசத்தை நீடிப்பது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து உளவுத்துறை தலைவர் வில்லியம் பர்ன்ஸ் தலிபான் தலைவருடன் ஆலோசனை நடத்தியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



# ஆப்கானிலிருந்து வேகமாக வெளியேறுங்கள் தனது படைக்கு ஜோ பைடன் கட்டளை

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் செயற்பாடு மும்முரமாக இடம்பெறவேண்டும் என்றும் இந்த மாத இறுதிக்குள் அது முற்றுப்பெற்றுவிட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். சில அமெரிக்க துருப்புக்கள் ஏற்கனவே திரும்பப் பெறப்பட்டுள்ள நிலையில் வெளியேற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை என அமெரிக்க ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஒன்பது நாள்களுக்கு முன்பு தலிபான்களிடம் வீழ்ந்த காபூலில் இருந்து குறைந்தது 70 ஆயிரத்து 700 பேர் இதுவரை விமானத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இருப்பினும் வெளியேற்ற நடவடிக்கையை நீடிப்பதற்கு நாட்டில் உள்ள தலிபான் போராளிகள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர் எனவும் ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அத்தோடு ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளிடம் இருந்து அதிகரித்து வரும் அச்சுறுத்தல் காரணமாக விமானப் போக்குவரத்து விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்நிலையில் தேவை ஏற்படின் காலக்கெடுவைத் தாண்டிய தற்காலிக திட்டங்களை உருவாக்குமாறு பென்டகன் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திடம் ஜோ பைடன் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் அகதி அந்தஸ்துக்கு தகுதிபெறும் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான்களை மீளக்குடியமர்த்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்த அவர் இதில் அமெரிக்காவும் ஒரு பங்கினை வகிக்கும் என்றும் குறிப்பிட்டார். இந்த மாத இறுதிக்குள் அமெரிக்கர்கள் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று தலிபான்கள் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சிட்னியில் கொரோனா உச்சம்

முடக்கங்களும் கட்டுப்பாடுகளும் நடைமுறையில் உள்ள நிலையில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. இதனால் அங்கு கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கி தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை அதிகரிக்குமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். இரண்டு மாதங்களாக முடக்கம் நிலவியபோதிலும், டெல்டா திரிபு வைரஸ் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 919 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 113 பேர் அவசர சிகிச்சையில் உள்ளனர் என்றும் அவர்களில் 98 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர். கொரோனாவைரஸின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த போராடி வரும் ஆஸ்திரேலியா, அதன் மிகப்பெரிய நகரங்களான சிட்னி மற்றும் மெல்போர்ன் உள்ளிட்டவற்றை முடக்கியுள்ளது. தடுப்பூசி நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. டெல்டா திரிவு வைரஸ் பரவி வரும் நிலையில் ஆஸ்திரேலியாவில் இதுவரை 46, 600 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் மட்டுமே பதிவாகியுள்ளதோடு 986 இறப்புகள் பதிவாகியுள்ளன.

# அமெரிக்கன் என்பதில் நான் வெட்கப்படுகிறேன்!

## நடிகை ஏஞ்சலினா ஜூலி காட்டம்



அமெரிக்க நாட்டைச் சார்ந்தவர் என்பதற்காக நான் வெட்கப்படுகிறேன் என்று தெரிவித்துள்ளார் ஹொலிவூட் நடிகை ஏஞ்சலினா ஜூலி. ஆப்கானில் இருந்து அமெரிக்க நாட்டுப் படை பின் வாங்கியதைச் சாடும் வகையில் இதனை அவர் தெரிவித்துள்ளார். ‘ஆப்கான் நாட்டின் உள்நாட்டு போர் குறித்து ஒவ்வொருவருக்கும் வெவ்வறு விதமான கண்ணோட்டம் இருக்கலாம். ஆனால் இதனை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த போர் இப்படியாக முற்று பெற்றிருக்க கூடாது’ என அவர் கூறியுள்ளார். அங்கு சமாதானத்திற்கான பேச்சில் ஆப்கான் அரசு மற்றும் தலிபானுக்கும் இடையே விட்டுக் கொடுத் தது ஏன் என்றே புரிய வில்லை.

நம்மை நம்பிய கூட்டாளிகளை இப்படி பாதியில் கைவிட்டுள்ளது பலரது தியாகத்திற்கு இழைக்கப்பட்ட துரோகமாகும். இதை புரிந்து கொள்ளவே முடியவில்லை. இதற்காக அமெரிக்க குடிமகளாக நான் வெட்கப்படுகிறேன்.

அங்குள்ள பெண்கள் மற்றும் சாதாரணமானவர்களின் நிலை இனி என்னவாகும் என்பதை நாம் கவனிக்க தவறி விட்டோம்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரண்டு டோஸ்கள் ஏற்றியும் பயனில்லை!

## ஆராய்ச்சி ஒன்றில் அதிர்ச்சி



இரண்டு தடவைகள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்குத் தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு குறைந்து வருகின்றது என்று ஓர் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. மே, ஜூலை மாதங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் தரவை உள்ளடக்கியே குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி பைஸர் அல்லது அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டு அளவுகளைப் பெற்ற ஒரு மில்லியனுக்கும் அதிகமானமக்களிடையே குறித்த பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் பைஸர் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்டவர்களின் பாதுகாப்பு ஒரு மாதத்தில் 88 சதவீதத்திலிருந்து ஐந்து முதல் ஆறு மாதங்களில் 74 சதவீதமாகக் ஆகக் குறைந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அஸ்ட்ராஜெனெகாவைப் பொறுத்தவரை, நான்கு முதல் ஐந்து மாதங்களில் 77 சதவீதத்தில் இருந்து 67 சதவீதமாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈழத் தமிழர் வரலாறு பற்றிய அவதூறுப் பரப்புரைகளுடன் தமிழ்ப்பாட நூல்கள் வெளியீடு என சினத்துடன் சீமான் அறிக்கை

புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கெதிராக பாடநூல்கள் எனும் பெயரில் ஒரு சில அமைப்புகளால் திட்டமிட்டுச் செய்யப்படும் ஈழத்தமிழர்கள் வரலாறு பற்றிய அவதூறுப் பரப்புரைகளையும், பொய்யுரைகளையும் தடுத்து முறியடிக்க உலகத்தமிழர்கள் துணைநிற்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை விடுத்திருக்கிறார்

இதுதொடர்பாகசீமான்வெளியிட்டிருக்கும் அறிக்கையில், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழர் அமைப்பொன்றினால் வெளியிடப்பட்டிருக்கும் தமிழ்க் குழந்தைகளுக்கான தமிழ்ப்பாடப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறு முழுமையாகத் திரிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

ஈழத்தின் பூர்வக்குடிகள் தமிழர்கள் இல்லை எனவும், தமிழ் மன்னர்கள் சிங்கள மக்களைத் துன்புறுத்தினர் எனவும், தமிழர்கள் போராடியதால்தான் கொல்லப்பட்டனர் எனவும் கற்பனைகளை உருவாக்கி, உண்மைக்குத் துளியும் தொடர்பில்லாத பொய்களை தமிழர் இன வரலாறாக மாற்ற முனையும் வன்மச் செயல்பாடுகள் கடும் கண்டனத்திற்குரியவை. யாழ் நூலகம் சிங்களவர்களால் எரியூட்டப்படவில்லையெனவும், தமிழக மன்னர்கள் படையெடுத்தப் பின்புதான், தமிழர்கள் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தனர் எனவும், சிங்களவர்களின் வருகைக்குப் பிறகே, இலங்கையின் வரலாறு தொடங்குகிறது எனவும் கற்பனையாகச் சித்தரிக்கப்பட்டு, ஈழ வரலாறே ஒட்டுமொத்தமாக மாற்றி வேறொரு கோணத்தில் எழுதப்பட்டிருப்பது உலகத்தமிழர்களை உள்ளம் கொதிக்கச்செய்கிறது.

இலங்கைஅரசின்பாடப்புத்தகங்களே தமிழர்களின் சமயத்தை சைவம் எனக் குறிப்பிடும்போது, தற்போது வெளியிடப்பட்டிருக்கும் இப்பாடநூல்களில் தமிழர்களை, ‘இந்துக்கள்’ எனக் குறிப்பதன்மூலம், சிங்களப்பேரினவாதம் நிகழ்த்திய இனப்படுகொலையை பௌத்த மதத்தினருக்கும் இந்து மதத்தினருக்குமான மத மோதலாகச் சுருக்கிக் காட்ட முனையும் சூழ்ச்சி அம்பலமாகிறது. இவ்வாறு தமிழர்களின் வரலாற்றைத் திரித்துக்கூறி, அடுத்த



தலைமுறைப்பிள்ளைகளுக்குத் தவறாகக் கற்பிப்பதன் மூலம் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இழிவுபடுத்தி, அவர்களது தாயகப்பற்றையும், இன உணர்வையும் மழுங்கடிக்கச்செய்யும் வஞ்சகச்செயல் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகிறது என்பது தெளிவாகிறது.

உலகின் மூத்தத் தொல்குடிச் சமூகமான தமிழினத்தின் பழம்பெருமையையும், பெரும்புகழையும் பறைசாற்ற வரலாற்றுச்சான்றுகள் இல்லாது இலக்கியச்சான்றுகளே தரவுகளாக இருப்பது எந்தவொரு இனத்திற்கும் நேர்ந்திடக் கூடாப் பெருந்துயரமாகும். இத்தகைய துயர்மிகு நிலையில், ‘வரலாற்றில் அடிமைப்படுத்தப்பட்டு, அழித்தொழிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான வரலாற்றைத் தாங்களே படைப்பார்கள்’ எனும் அண்ணல் அம்பேத்கரின் முதுமொழிக்கேற்ப, தமிழர்களின் வீரம்செறிந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி, இன ஓர்மையடைந்து மீளெழுச்சிகொள்வதற்கும் இழந்தத் தாயகத்தைப் போராடி மீட்டெடுப்பதற்குமாக வருங்கால தமிழ்த் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதென்பது தலையாய கடமையாகும். அதனைத் தகர்த்து முறியடிக்கும் வகையில் நடைபெறும் இத்தகைய ஈனச்செயல்கள் பெருஞ்சினத்தைத் தருகின்றன.

ஆகவே, புலம்பெயர் நாடுகளில் தமிழர்களுக்கெதிராக ஒரு சில அமைப்புகளால் பாடநூல்கள் எனும் பெயரில் திட்டமிட்டுச் செய்யப்படும் அவதூறுப் பரப்புரைகளையும், உள்நோக்கத்துடனான பொய்யுரைகளையும் தடுத்து முறியடித்து, தமிழர்களின் மெய்யான வரலாற்றை நிலைநிறுத்த துணைநிற்க வேண்டுமென உலகத்தமிழர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்திருக்கிறார்.

# மேகதாது அணை கட்டும் விவகாரம்; கர்நாடக முதலமைச்சர் டெல்லி பயணம்



தமிழகத்தின் எதிர்ப்பை மீறி கர்நாடக அரசு மேகதாது என்ற இடத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிய அணையொன்றைக் கட்டத் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் கொவத்தை கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை நாளை சந்தித்துப் பேசவிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்காக கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை இன்று டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

புறப்படுவதற்கு முன்னர் கர்நாடக முதலமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், அண்டை மாநிலங்களுடனான நதிநீர் பங்கீடு குறித்து சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசிக்க நான் டெல்லி செல்ல இருக்கிறேன். கர்நாடக அரசின் அட்வகேட் ஜெனரல், மூத்த வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். நதிநீர்ப் பிரச்சினைகளில் கர்நாடக அரசின் அடுத்தகட்ட நிலைப்பாடு என்ன என்பது குறித்து அந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும். கர்நாடகா மாநிலத்தில் நிலம், நீர், மொழியைப் பாதுகாக்க அனைத்து முயற்சியும் மேற்கொள்வேன். இதில் யாருக்கும் எந்த விதமான சந்தேகமும் வேண்டாம். டெல்லி சென்று 26 ஆம் திகதி மத்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறேன்.

இந்தச் சந்திப்பின்போது கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சி குறித்தும் விவாதிக்க இருக்கிறேன். மத்திய சுகாதாரம், நிதி, ஜல்சக்தி, விவசாயம் மற்றும் இராணுவத் துறைகளின் அமைச்சர்களைச் சந்திக்க உள்ளேன் என்று தெரிவித்திருக்கிறார்.



# இன்று விஜயகாந்தின் 69 ஆவது பிறந்தநாள் இல்லாதவருக்கு உதவி செய்யுமாறு அறிக்கை

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் இன்று தனது 69 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். அவருக்கு திரையுலகினர் மற்றும் அரசியல் பிரபலங்கள் பலரும் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பிறந்த நாள் வாழ்த்துச்செய்தியில், தே.மு.தி.க. நிறுவனரும் தமிழ் மக்களின் அன்புக்குரிய கதாநாயகருமான நண்பர் கப்டன் விஜயகாந்த் அவர்கள் நீண்ட நாள்கள் உடல் நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ அவரது பிறந்தநாளில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, கொரோனாத் தொற்று இன்னும் குறையாத நிலையில், பெருக்கூட்டம் கூடினால் தொற்று மேலும் பரவும் அபாயம் உள்ளது. எனவே, அனைவரின் நலன் கருதி தனது பிறந்தநாளன்று தொண்டர்கள் யாரும் தன்னை நேரில் சந்திக்க வரவேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் எனவும், கூட்டம் கூடுவதைத் தவிர்த்து, தங்களால் இயன்ற உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு செய்து பிறந்தநாளைக் கொண்டாடுங்கள் என்றும் விஜயகாந்த் அறிக்கை வாயிலாக தனது கட்சித் தொண்டர்களிடமும் ரசிகர்களிடமும் கேட்டுக்கொண்டிருந்தார்.

2006 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தனது பிறந்தநாளை வறுமை ஒழிப்புதினமாகக் கடைப்பிடித்து வருவதையும் நினைவுபடுத்திய அவர், இயன்றதைச் செய்வோம், இல்லாதவர்க்கே – என்ற கொள்கை முழக்கத்தோடு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மக்களுக்கான பல உதவிகளைச் செய்துவருவதுபோன்று இந்த வருடமும் தொடருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

# சொத்துக்களை விற்கும் பா.ஜ.கவினால் பொருளாதாரம் சீரழிகிறது என்கிறார் ராகுல்



70 ஆண்டுகளாக நாட்டில் உருவாக்கப்பட்ட சொத்துகள் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றன என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசுக்குச் சொந்தமான சொத்துகளை குத்தகைக்கு விட்டு அடுத்த 4 ஆண்டுகளில் 6 லட்சம் கோடி ரூபாவைத் திரட்ட இந்திய மத்திய அரசு புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்த உள்ளது.

இது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் டெல்லியில் காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தியும் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரமும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய ராகுல் காந்தி, காங்கிரஸ் ஆண்ட 70 ஆண்டுகளில் எதுவுமே நடக்கவில்லை என குற்றஞ்சாட்டும் பா.ஜ.க., தற்போது அதே 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சொத்துகளை விற்பதாகக் குற்றஞ்சாட்டினார். பொருளாதாரத்தை சரியான முறையில் நிர்வகிக்காததே இந்த அவல நிலைக்கு காரணம் என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

மோடிஅரசின் இத்திட்டத்தால் ஒவ்வொருதுறையிலும் குறிப்பிட்ட சிலரின் ஆதிக்கமே நிலவும் என்றும் இதனால் வேலைவாய்ப்பு உருவாக்கம் பாதிக்கப்படும் எனவும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

தனியார் மயமாக்கலை காங்கிரஸ் எதிர்க்கவில்லை என்ற ராகுல் காந்தி, நஷ்டமடையும் அரசு நிறுவனங்களின் பங்குகளை மட்டுமே தங்கள் ஆட்சிக் காலத்தில் விற்றதாகத் தெரிவித்தார்.

சொத்துகளை விற்கும் மிகப்பெரிய திட்டத்திற்கு நிபுணர்கள், துறை சார்ந்த எவரையும் இந்த அரசு கலந்தாலோசிக்கவில்லை என ப.சிதம்பரம் விமர்சித்திருக்கிறார்.

# 26 கொரோனாத் தொற்றாளர்கள் திருக்கோவிலில் அடையாளம்




திருக்கோவில் பிரதேசத்தில் 26 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் அநாவசியமாக வீதிகளில் நடமாடியவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 152 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 26 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.மோகனகாந்தன் தலைமையில் பிரதேசசெயலாளர் ரி.கஜேந்திரன் மற்றும் உதவிப்பிரதேசசெயலாளர் மு.சதிசேகரன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் இதனைக் கட்டுப்படுத்தவதற்காக சுகாதாரத்துறை மற்றும் பிரதேச செயலகம் பாதுகாப்புத் தரப்பினர் பல்வேறு நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் 196 பேர் அடையாளம்



திருகோணமலை மாவட்டத்தில் நேற்று காலை வரை 196 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது .

ஆண்கள் 95 பேரும், பெண்கள் 101 பேருமாக மொத்தம் சேருவில 01,குறிஞ்சாக்கேணி 01,பதவிசிறிபுர 02 ,குச்சவெளி 11 ,தம்பலகாமம் 13, மூதூர் 25, கந்தளாய் 30,உப்புவெளி 31,ஹோமரன்கடவெல 40, திருகோணமலை 42 என பதிவாகியுள்ளன.

அதேபோல இறப்புக்கள் 8ஆக பதிவாகியுள்ளன அந்தவகையில் திருகோணமலை 04, உப்புவெளி 02 ,மூதூர் 01 ஹோமரன்கடவெல 01 என மொத்தம் 8 மரணங்களும் பதிவாகியுள்ளன .

# கின்னியா பிரதேச சபை நடவடிக்கைகள் அனைத்தும் தந்காலிகமாக இடைநிறுத்தம்



கிண்ணியா பிரதேச சபை ஊழியர்கள் இருவருக்கு ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுக் காரணமாக முக்கியமான வேண்டுகோள் ஒன்றினை பிரதேச சபை தவிசாளர் கே.எம்.நிஹார் நேற்று விடுத்துள்ளார்.

சபையில் கடமையாற்றும் சில ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால் சில தினங்களுக்கு சபையின் நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன எனவும், எனவே மறு அறிவித்தல் வரை சபையின் சேவையை நாடி பொது மக்கள் யாரும் வரவேண்டாம் என்பதுடன் தங்களுடைய வீட்டுக்கழிவுகளை சுயமாகவே அகற்றி சுத்தத்தினை பேணுமாறும் மக்களை கேட்டுக் கொண்டார்.

# தங்கச் சங்கிலி கொள்ளை இராணுவ வீரர் கைது

மட்டக்களப்பு - கல்குடா விநாயகபுரம் பிரதேசத்தில் 14 வயதுடைய சிறுமியின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவவீரர் ஒருவரும் மற்றுமொரு வாலிபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கல்குடா பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சந்தன விதானகே தெரிவித்துள்ளார்.

இவர்கள் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டமையையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

விநாயகபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி தனியாக கடைக்குச்சென்று திரும்பும்வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த 22 வயதுடைய வாலிபர் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் அப்பகுதி வர்த்தக நிலையமொன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வீ கமராவில் பதிவாகியிருந்தது.

அதனை அடிப்படையாகக்கொண்டு குறித்த நபரைக்கைது செய்தவேளை அந்த மாலையை விற்பனை செய்வதற்கு வாழைச்சேனை மீன்பிடி துறைமுகப்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து அந்த இருவரும் கைது செய்யப்பட்டனர் எனபொலிஸார் தெரிவித்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ வீரர் மேலும் பல குற்றசெயல்களுடன் சம்பந்தப்பட்டவரென தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

# அக்கரைப்பற்று புதிய பிரதேச செயலர் இன்று காலையில் பதவி ஏற்றார்

அக்கரைப்பற்று பிரதேச செயலாளராக காத்தான்குடியை சேர்ந்த ரீ.எம். எம். அன்ஷார் இன்று காலை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த நான்கு வருடங்களாக நிந்தவூர் பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த இவர் அக்கரைப்பற்று பிரதேச செயலாளராக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

புதிய பிரதேச செயலாளர் ரீ .எம். எம். அன்ஷார் அவர்களை வரவேற்கும் நிகழ்வு இன்று காலை அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது புதிய பிரதேச செயலாளருக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்து வாழ்த்தி வரவேற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பு சுகாதாரப் பிரிவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள்

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்குமான இரண்டாம் டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இன்று காலை இடம் பெற்றன என கோட்டைமுனை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தெரிவித்தார். ஒரே இடத்தில் 30 வயது முதல் 40 வயது மற்றும் 40 வயது முதல் 60 வயதுக்கு மேற்பட்டோர் என சகல வயதினருக்கும் சினோபோர்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள போதிலும் மக்கள் ஆர்வத்துடன் வந்து தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினரும் பொலிஸாரும் காத்தான்குடியில் கடும் சோதனை

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரைக் கைது செய்ய காத்தான்குடி நகரில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடுமையான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

காத்தான்குடி பிராதான வீதியில் பெருமளவிலான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பல இடங்களில் வாகனங்களில் செல்வோர் மற்றும் தேவையின்றி வீதிகளில் நடமாடுவோர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தில் ஊரடங்கை மீறி நடமாடு வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாலேயே சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# சேதன உர வேலைத்திட்டம் அக்கரைப்பந்றில் ஆரம்பம்

ஆரோக்கியம் மற்றும் வினைத்திறன் மிக்க பிரஜைகளை உருவாக்குவதற்கு நச்சுத் தன்மையற்ற உணவுக்கான உரிமைகள் எனும் அம்சம் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடன திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்று செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக் , உப தவிசாளர் ஏ.எம். அஸ்ஹர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸான், பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.பர்ஷாத், பள்ளிக்குடியிருப்பு ஜும்மா பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.எல்.எம். அஷ்ரப், அக்கரைப்பற்று கமநல சேவை மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.எல்.ஹமீத், அக்கரைப்பற்று பிரதேச சபை செயலாளர் எல்.எம். இர்பான் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாய தொழில்நுட்பவியலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# ஷாஹீன் அப்ரிடி அபாரமான பந்துவீச்சு மே.இ. தீவுகளை வீழ்த்தியது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 109 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 110 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 302 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்திருந்தது. தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 51.3 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. போனர் 37 ஓட்டங்களை அதிகபட்சமாக அடித்திருந்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் ஷா அப்ரிடி 6, மொஹமட் அப்பாஸ் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

பின்னா முதல் இன்னிங்ஸில் 152 ரன்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தான், 27.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களை எடுத்து தனது இன்னிங்ஸினை முடித்துக்கொண்டது. இம்ரான் பட் 37 ஓட்டங்கள் சேர்த்தார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜேசன் ஹோல்டர், அல்ஸாரி ஜோசஃப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். பின்னர் 329 ரன்களை இலக்காகக் கொண்டு தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 219 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியைச் சந்தித்தது. ஜேசன் ஹோல்டர் அதிகபட்சமாக 47 ஓட்டங்களை எடுத்தார். பாகிஸ்தான் அணியின் அப்ரிடி அபாரமாகப் பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தப் போட்டியில் மொத்தமாகப் பத்து விக்கெட்டுகளை வீழ்த்திய அவரே இந்தப் போட்டியினதும் தொடரினதும் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

முதல் டெஸ்ட் போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்று சமநிலைப்படுத்தியுள்ளது.

# டோக்கியோ பாரா ஒலிம்பிக் இன்று போட்டிகள் ஆரம்பம்



ஜப்பானின் டோக்கியோ நகரில் 16 ஆவது பாரா ஒலிம்பிக் போட்டிகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாரப்பூர்வமாக ஆரம்பமாகியிருந்தன. வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி வரை 13 நாள்களுக்கு நடைபெறுகின்ற மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த பாரா ஒலிம்பிக்கில், விளையாட்டுப் போட்டிகள் இன்றிலிருந்து தொடங்குகின்றன.

டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் சாவதேச பாரா ஒலிம்பிக் குழுவின் (ஐ.பி.சி.) தலைவா அன்ட்ரூ பார்சன்ஸ், ஜப்பான் அரசா நருஹிடோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்ச்சியானது, எண்ண இயலாத துன்பங்களுக்கு இடையேயும் உயரப் பறக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்ளும் முயற்சிகளைச் சித்தரிக்கும் வகையில், ‘எங்களுக்கும் சிறகுள்ளது’ என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் அதைச் சார்ந்தே இருந்தன.

நிகழ்ச்சியானது, பாரா ஒலிம்பிக் போட்டியாளர்களின் பலத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான காணொலி திரையிடப்பட்டதில் இருந்து தொடங்கியது. அதைத் தொடர்ந்து பாரா ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கியதை குறிக்கும் வகையில் மைதானத்திலிருந்து வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. அதன் பிறகு பாரா ஒலிம்பிக் குழுவின் தலைவர், அரசா நருஹிடோ ஆகியோர் மேடையில் தோன்ற, பாரா ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின என அரசா நருஹிடோ அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஜப்பானைச் சேர்ந்த பாரா ஒலிம்பிக் மல்யுத்த சம்பியன் காவ்ரி இசோ உள்பட 6 போ ஜப்பான் கொடியை மேடைக்கு ஏந்தி வந்தனர். அதன் பிறகு கொடியேற்றப்பட்டது. பின்னர் பங்கேற்பு நாடுகளின் அணிவகுப்பு, அகதிகள் குழுவிலிருந்து தொடங்கியது. அதில் இஸ்ரேல் அணியினரை ஒரு வழிகாட்டி நாய் அணிவகுத்து நடத்தி வந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்தது.

தலிபான்கள் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் வகையில், அந்த நாட்டின் தேசியக் கொடியும் அணிவகுப்பில் ஏந்தி வரப்பட்டது. அப்போது மைதானத்தில் கூடியிருந்தவர்கள் பலமான கரவொலி மூலம் அதற்கு வரவேற்புத் தெரிவித்தனர். நடப்பு அரசியல் சூழல் காரணமாக அந்த நாட்டிலிருந்து போட்டியாளாகள் பங்கேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.



பாரா ஒலிம்பிக் போட்டியானது 57 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டோக்கியோ நகரில் நடத்தப்படுகிறது. இதன் மூலம், பாரா ஒலிம்பிக் போட்டியை இரு முறை நடத்திய முதல் நகரம் என்ற பெருமையை டோக்கியோ பெற்றுள்ளது. டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் பங்கேற்கும் போட்டியாளாகள் எண்ணிக்கை 4,403. கடந்த ரியோ பாரா ஒலிம்பிக்கில் பங்கேற்றோர் எண்ணிக்கையை விட (4,328) இது அதிகமாகும்.



# இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையே 3 ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகியுள்ளது. 5 போட்டிகள் கொண்ட தொடரில், லோர்ட்ஸில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் வென்றதன் மூலம் இந்திய அணி 1-0 என முன்னிலையில் உள்ளது.

லீட்ஸ் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால், லோர்ட்ஸ் போட்டியில் விளையாடிய அதே இந்திய அணியே இந்தப் போட்டியிலும் விளையாடுகிறது. சுழல் பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு இந்தப் போட்டியிலும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இங்கிலாந்தைப் பொறுத்தவரையில், சிப்லிக்குப் பதிலாக, டேவிட் மலானும், காயமடைந்துள்ள வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட்டுக்குப் பதிலாக கிரேக் ஒவர்டோனும் விளையாடுகின்றனர். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுள்ள இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகிறது.

# ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளின் ஒரு நாள் போட்டித் தொடர் ஒத்திவைப்பு

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் வருகிற செப்டெம்பர் முதலாம் திகதி தொடங்கி 8 ஆம் திகதி வரை நடைபெறத்திட்டமிடப்பட்டிருந்தது.

ஆப்கானிஸ்தானில் அதிபர் அஷ்ரப் கனியிடம் இருந்து ஆட்சி அதிகாரம் தலிபான்கள் வசம் சென்றுள்ள நிலையில், விமானப் போக்குவரத்துப் பாதிப்புகள், வீரர்களின் மனநலம் ஆகியவற்றினால் இந்தப் போட்டித் தொடர் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரை முதலில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்திட முடிவெடுக்கப்பட்டு, ஐ.பி.எல். போட்டிகளின் காரணமாக இலங்கையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொடரை ஒத்திவைப்பதான செய்தியை இரு நாட்டு அணிகளின் கிரிக்கெட் சபைகளும் இணைந்து முடிவு செய்து வெளியிட்டுள்ளன. இந்தத் தொடர் நிச்சயம் நடைபெறும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகக் குழுவினர் சில தினங்களுக்கு முன்னர் உறுதிபடத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த முடிவையடுத்து, ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் விளையாடுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

# சிவபதப்பேறு குறித்த அறிவித்தல்



## தெய்வத் திருமதி
## இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளை

**சிவபூமியில்:** **03 - 01 - 1931**

**சிவபுரத்தில் :** **24 - 08 - 2021**

**(இளைப்பாறிய ஆசிரியர் – மதவுவைத்தகுளம் அ.த.க. பாடசாலை வவுனியா, நெடுங்கரைச்சேனை அ.த.க. பாடசாலை வவுனியா, பெரியபுலம் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் , இளையதம்பி அ.த.க. பாடசாலை யாழ்ப்பாணம்)**

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், கொக்குவில் தலையாளி, டொரோன்டோ கனடா மற்றும் சிட்னி ஆஸ்திரேலியாவினை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை ஆசிரியை தெய்வத் திருமதி.இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளை 24-08-2021செவ்வாய்க்கிழமை ஆவணித் திங்கள் தேய்பிறை இருமைப் பிறைநாளில் சிட்னியில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலம்சென்ற செல்லத்துரை, சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகளும், காலம்சென்ற சிதம்பரம்பிள்ளை, சிவக்கொழுந்து அவர்களின் மருமகளும், காலம்சென்ற ஆசிரியர் சிதம்பரம்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

இவர் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், அருளம்பலம், குணரத்தினம், பராசக்தி, பரமேஸ்வரி, தனலட்சுமி, சிவயோகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி இலட்சுமணப்பிள்ளை, பாக்கியலட்சுமி பேரம்பலம், இரத்தினபூபதி சோமசுந்தரம், சொர்ணலிங்கம், மாசிலாமணி, வல்லிபுரம், கங்கைவேணியன் மற்றும் சத்தியரூபவதி குணரத்தினம் (சிட்னி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களான சிவத்திரு.இந்திரகுமார் (பொறியியலாளர் – சிட்னி), சிவத்திரு.சிவகுமார் (பொறியியலாளர் – பிறிஸ்பேண்), சிவத்திரு.சிதம்பரகுமார்(பரன்) (வைத்தியர் – சிட்னி), சிவத்திரு.ஈஸ்வரகுமார் (மருத்துவப்பணியாளர் – சிட்னி) மற்றும் திருமதி.உதயராணி சிவபாலன் ( ஐக்கிய இராச்சியம் , ஆசிரியர்) (பழைய மாணவி – யாழ் இந்து மகளிர் கல்லூரி) , திருமதி.பிரேமகுமாரி மதியழகன் (ஐக்கிய இராச்சியம், ஆசிரியர்) (பழைய மாணவி – வேம்படி மகளிர் கல்லூரி) மற்றும் திருமதி.கலாராணி தேவராஜா (சிட்னி, ஆய்வுகூட நிபுணர்) (பழைய மாணவி – வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத்தாயாரும் ஆவார்.

பிரேமளச்செல்வி இந்திரகுமார், சிவபாலன், கோணேஸ்வரி சிவகுமார், கீதா சிதம்பரகுமார், மதியழகன், தேவராஜா, சந்திரிகா ஈஸ்வரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

பிரஷாந், திருமதி.ஐஸ்வர்யா பிரஷாந், தாட்சாயினி ஐசாக், டெக்ஸ்ரர் ஐசாக், கோகுலன், தனுஷன், சிவஆரணி, அனோஜன், நிலாங்கா அனோஜன், யாழினி நிஷாந்த், நிஷாந்த் குணசேகரம், இந்துஜன், கதரின் இந்துஜன், சைலா, அபிலாசினி, அச்சுதன்,சோபன், ஆருணி, ஷாலினி,அனோஜி,அபிமன்,அஷ்சயா, ஆரதி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

தாரகை,அரேயா,ஸ்கை,நெத்தானியல்,எஸ்லா,சார்ழி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அம்மாவின் இறுதிச் சடங்குகள் நாளை (26-08-2021) வியாழக்கிழமை சிட்னி மேற்கு மின்ஞ்சென்பெரியில் மதியம் 12.00 (சிட்னி நேரம்) தொடக்கம் 1.30 மணிவரை நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

கொரோனா தீநுண்மிப் பரவலாலும், தற்போதைய ஒன்றுகூடல் கட்டுப்பாடுகளாலும் சிவப்பேறு தொடர்பான சடங்குகள் குடும்பத்தினருடன் மட்டும் நடைபெறும் என்பதனை அறியத்தருவதோடு, இணையவழி நேரலையை கீழுள்ள இணைய முகவரியில் காணலாம்.

அந்த நேரத்தில், அம்மாவின் உயிர் எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதங்களில் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு அடைய வேண்டுமென்று சிவபரம்பொருளை வேண்டி வழிபடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்*
*ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

**நேரலை முகவரி: https://www.oneroomstreaming.com/login**
**நுழைவுச்சொல்: sahara@saharafunerals.com.au**
**கடவுச்சொல்: 82PV6V**

தகவல்
**குடும்பத்தினர்**
**இந்திரகுமார் (மகன்)**
+61421328385 / tikumar@bigpond.com

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சுகாதார அமைச்சு செயலரின் உத்தரவுகளை செயற்படுத்துவதை உடன் நிறுத்த கோரிக்கை

## புதிய சுகாதார அமைச்சருக்கு தொழிற்சங்க தலைவர் விடுப்பு

சுகாதார அமைச்சின் செயலாளரின் உத்தரவுகளை நிறைவேற்றுவதை உடனடியாக நிறுத்துமாறு சுகாதார சேவையின் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர், இலங்கையின் புதிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'நீங்கள் முதுகெலும்புடன் சுகாதார அமைச்சராக செயற்பட விரும்பினால், உங்களைத்தாண்டிவரும்உத்தரவுகளை அமுல்படுத்துவதிலிருந்து உடனடியாக சுகாதார செயலாளருக்கு தடை விதியுங்கள்' இல்லையெனில் சுகாதார சேவையில் சரியான தீர்மானங்களை மேற்கொள்வதில் சீரான தன்மையைப் பேணுவது கடினம்' என வைத்திய ஆய்வக விஞ்ஞானிகள் நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த சூழ்நிலையை எதிர்கொண்டார் எனவும், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுமாறும், கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போது தொழிற்சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இராணுவ வைத்தியப் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி மற்றும் இராணுவ சுகாதார சேவையின் தலைமைப் பணிப்பாளரான, மேஜர் ஜெனரல் வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க சுகாதார அமைச்சின் தற்போதைய செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

கொடிய தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்த நாடு முடக்கப்பட்ட விதம் அறிவியல் பூர்வமானது அல்ல எனக் குற்றம் சாட்டிய ரவி குமுதேஷ், இலங்கை அரசியல் ரீதியாக முடக்கப்பட்டுள்ளதாக வலியுறுத்தியுள்ளார்.

நாங்கள் ஓர் அறிவியல் முடக்கத்தை கேட்டோம். எங்களுக்கு அரசியல் முடக்கம்கிடைத்துள்ளது. வழங்கப்பட்டது. முடிந்தால் ஏதாவது செய்யுங்கள் என்ற ஓர் ஆச்சரியமான முடக்கம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.'

இதுபோன்ற சூழ்நிலையில் எதிர் பார்த்த நோக்கங்கள் நிறைவேறாது எனவும், பொறுப்பு முற்றிலும் அரசியல் சார்ந்ததல்ல எனவும் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார். சுகாதார அமைச்சுக்கு இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது கடமைகளை ஒழுங்காக மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சிற்கு உத்தரவிடுமாறு, இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ரவி குமுதேஷ் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அஜித் றோஹணவுக்கும் கொவிட் தொற்று உறுதி



சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரும் முன்னாள் பொலிஸ் பேச்சாளருமான அஜித் றோஹணவுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது உடல்நிலை தொடர்பில் கவலையடையத் தேவையில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கொரிய தூதுவரைச் சந்தித்தார்



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்மற்றும்இலங்கைக்கான கொரியக் குடியரசின் தூதுவர் சந்துஷ் வூன்ஜின் ஜியோங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (செவ்வாய் கிழமை) வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது.

வெளிநாட்டு அமைச்சரின் புதிய நியமனத்துக்காக பாராட்டுக்களை தெரிவித்த தூதுவர் வூன்ஜின், பரஸ்பர நலன் சார்ந்த விடயங்களில் இரு தரப்பு மற்றும் பல்தரப்பு அமைப்புக்களில் இலங்கைக்கு உதவுவதற்கான தனது நாட்டின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

கல்வி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், டிஜிற்றல் மயமாக்கல், மருந்து உற்பத்தி, தொழிலாளர் இடம்பெயர்வு, மக்களுக்கிடையிலான பரிமாற்றம் மற்றும் பல்தரப்பு ஈடுபாடு உள்ளிட்ட கூட்டுறவு மற்றும் பரந்த அளவிலான ஒத்துழைப்பின் பகுதிகளை மையமாகக் கொண்டதாக இந்த சந்திப்பின் போதான கலந்துரையாடல் அமைந்திருந்தது.

## ஆசிய வங்கி நிதி உதவி

நாட்டில் சுகாதாரத்துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு நிதியுதவியை வழங்கவுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அதற்கமைய 3.75 கோடி அமெரிக்க டொலர்களை கடனாகவும், 1.25 கோடி அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாகவும், மொத்தமாக 5 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கவுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## ஒரு மாத சம்பளத்தை என்னால் வழங்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவிப்பு

நான் பொருளாதார நெருக்கடி நிலையில் உள்ளமையால் கொவிட்-19 நிவாரண நிதியத்துக்கு இம்மாத சம்பளத்தை அர்ப்பணிக்க முடியாது. நாடாளுமன்ற வங்கியில் பெற்ற கடனுக்காக மாத சம்பளம் முழுமையாக அறவிடப்படுகிறது என மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி , ஆரம்ப கல்வி, மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர்பியல்நிஷாந்தடிசில்வாதெரிவித்தார்.

அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட்-19 நிவாரண நிதியத்துக்கு அமைச்சரவை அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் இம்மாத சம்பளத்தை அர்ப்பணிப்பதற்கு தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. நெருக்கடியான நிலையில் அனைவரும் ஒன்றினைந்து செயற்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் உள்ளேன். ஆகவே என்னால் ஒகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட் -19 நிவாரண நிதியத்திற்கு வழங்க முடியாது. ஏனெனில் நாடாளுமன்றத்தில் உள்ள வங்கியில் பெற்றுள்ள கடனுக்கு மாத சம்பளம் முழுமையாக அறவிடப்படுகிறது. ஆகவே இவ்வாறான நிலையில் ஒரு மாத சம்பளத்தையும் முழுமையாக நிதியத்துக்கு வழங்க முடியாது.

கொவிட் நிதியத்துக்கு இதுவரை காலமும் இயலுமான நிதியை வழங்கியுள்ளேன். தற்போதும் செல்வந்தர்கள் ஊடாக நிதி பெற்றுக் கொள்ள முயற்சித்துள்ளேன். செல்வந்தர்கள் ஊடாக நிச்சயம் பன்மடங்கு உதவி செய்ய முடியும். – என்றார்.

## கொள்ளுப்பிட்டிக் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கொழும்பு – கொள்ளுப்பிட்டி கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் அப்பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில் தனியார் பாதுகாப்புப் பிரிவில் பணிபுரிந்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீட்கப்பட்டவர் மஸ்கெலிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சர்வதேச நாணய நிதியம் ஒதுக்கியுள்ள அமெ.டொலரை பெற இலங்கை தகுதி

நாடொன்றில் வெளிநாட்டு இருப்பை வலுப்படுத்த நிபந்தனையற்ற விசேட மீள்பெறுதல் உரிமைகளுக்காக 65 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பணத்தை சர்வதேச நாணய நிதியம் ஒதுக்கியுள்ளது.

இதனூடாக 81.6 கோடி அமெரிக்க டொலரை பெற்றுக்கொள்ள இலங்கை தகுதி பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நாட்டில் கொவிட் தொற்றுக் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கால் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தொடர்ச்சியாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படுவதால் அரசாங்கத்துக்கு தினமும் சுமார் 1,500 கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது.

எனவே நாடு முடக்கப்படுவதைத் தொடர்ந்தும் நீடிக்காது, முடிந்தவரை குறுகிய காலத்தில் திறக்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2021இல் வெளியிடப்பெற்றது.